Hale & Healthy HOSPITAL
Multi Speciality Since 1987
A1, Srinivasapuram, ECR, Thiruvanmiyur, Chennai - 600 041.
Contact
044-43090397/ 9677194440

# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper - Weekly

*Free Circulation*

நாவில் நடனமாடும் சுவைக்கு
கங்கா ஸ்வீட்ஸ்
GANGA SWEETS
PURE GHEE SWEETS
Contact
4264 5911 / 2615 4635

VOL - 4 ISSUE - 36 Editorial : 044-42077328 / 7305837388

## சிவா விஷ்ணு ஆலயத்தில் நடைப்பெற்ற தவன உற்சவம்...





நமது வேளச்சேரி சிவா விஷ்ணு ஆலயத்தில் 25/02/2023 அன்று சிறப்பாக நடைப்பெற்ற தவன உற்சவம். உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ பெருமாளுக்கும் அம்பாளுக்கும் நடைபெற்ற சிறப்பு அலங்காரம். இந்த நிகழ்ச்சியில் பக்த கோடிகள் அனைவரும் பங்கு கொண்டு சுவாமி அருள் பெற்றனர்.

ஆலயங்களிலுள்ள நந்தவனத்தில் சுவாமி எழுந்தருளி அங்குள்ள செடி, கொடி, மலர் உள்ளிட்ட தாவரங்களுக்கு அனுக்கிரஹம் செய்வதற்காக நடத்தப்படும் உற்சவமே தவன உற்சவம் என்றழைக்கப்படுகிறது. தவன எனும் மரிக்கொழுந்தானது மலர்களிலேயே அதிக நறுமணம் தரக்கூடியது. மரிக்கொழுந்து மலர்களாலேயே சுவாமிக்கு மாலை, தோரணம் கட்டி அதிக நறுமணம் கொண்ட அனைத்து அலங்காரங்களும் செய்யப்பட்டு பூஜை நடைபெறும். மனதை சுண்டி இழுக்கும் மரிக்கொழுந்து மலரின் வாசத்தால் இறைவன் மனம் குளிர்ந்து கேட்ட வரத்தை அருட்பாலிப்பார் என்றும், அந்த மரிக்கொழுந்து மலர் காயக்காய அதன் நறுமணம் அதிகரிப்பது போல, மனிதர்கள் கஷ்டப்பட்டு, கஷ்டப்பட்டு இறைவனை வணங்கக்கூடிய நேரத்தில் கஷ்டங்கள் நீங்கும் வகையில் இறைவனையும் குளிரவைத்து, பக்தனையும் குளிரவைக்கும் வகையில் நடத்தப்படுவதே தவன உற்சவம்.

ஸ்ரீ சிவ-விஷ்ணு ஆலயம்
4வது குறுக்கு தெரு, விஜயநகர், வேளச்சேரி, சென்னை – 600 042.
ஸ்ரீ ராம நவமி (உற்சவ) மஹோத்ஸவம்


| நிகழ்ச்சி | பலனும்/பயனும் |
|---|---|
| திருச்சிவிகை வாகனம் | சுக்கிரன் பூஜா பலன் |
| சூர்ய பிரபை வாகனம் | சூர்யன் பூஜா பலன் |
| கருட வாகனம் | ராகு பூஜா பலன் |
| சேஷ வாகனம் | கேது பூஜா பலன் |
| ஹனுமந்த வாகனம் | சனி பூஜா பலன் |
| யானை வாகனம் | குரு பூஜா பலன் |
| சந்திர பிரபை | சந்திரன் பூஜா பலன் |
| குதிரை வாகனம் | புதன் பூஜா பலன் |
| புஷ்ப பல்லக்கு | செவ்வாய் பூஜா பலன் |

| | |
|---|---|
| ஸஹஸ்ரநாம அர்ச்சனை | குடும்ப நலன் மேம்பட |
| சுந்தரகாண்ட பாராயணம் | காரிய தடை நீங்க |
| புத்திர காமேஷ்டி யாகம் | குழந்தை பாக்கியம் பெற |
| திருமஞ்சனம் | உடல் ஆரோக்கியம் பெற |
| கனகாபிஷேகம் | உத்தியோக உயர்வு பெற |

விஜயநகர் பக்த சமாஜ் (76/77)

## டான்சிநகர் நலவாழ்வு சங்கத்தின் சார்பாக 177வது வர்டில் பொது நிலத்தை மீட்க கோரிக்கை மனுக்கு பெறப்பட்ட பதில் குறுஞ்செய்தி...

வேளச்சேரி 177,வது வார்டில் அரசின் பொது இடங்களை சில தனியார்கள் ஆக்கிரமித்து கட்டிடங்களும் கடைகளும் கட்டப்பட்டு வாடைகை பெற்று வருகின்றனர். இதன் காரணமாக நியாயவிலைகடை, துணைமின்நிலையம்,கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற அத்தியாவசிய முக்கிய பயண்பாட்டிற்கு நிலம் இல்லாமல் மேற்கண்ட பணிகளை நிறைவேற்ற முடியாமல் கிடப்பில் இருப்பதாகவும் அரசின் பொதுபயண்பாட்டு இடத்தை மீட்க கோரியும் டான்சிநகர் நலவாழ்வு சங்கத்தின் சார்பாக 13-02-2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் தனிபிரிவு,மாவட்ட ஆட்சியர், சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு பதிவு தாபால் மூலமாக மனு அனுப்பப்பட்டது. அதன் அடிப்படையில் வருவாய் துறைக்கு விசாரணைக்கு அனுப்பட்டுள்ளதாக குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளன.



TANSI NAGAR WELFARE ASSOCIATION
(Regn. No. 65 of 1995)
No. 15/7, 14th Street, Tansi Nagar, Velachery, Chennai - 600 042.

P. SHANMUGAM, President, Mobile : 98414 78871
M. BALAKRISHNAN, General Secretary, Mobile : 91766 01710
R.S. RAGHURAMAN, Treasurer, Mobile : 98407 29692

Ref. : Date : 15-02-2023

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் (தனிப் பிரிவு)
தமிழ்நாடு தலைமைச் செயலகம் – ஜார்ஜ் கோட்டை
சென்னை – 600 009.

பொருள் : வேளச்சேரி 177வது வார்டில் ஆக்கிரமிப்பில் இருக்கின்ற பொது பயன்பாட்டு நிலத்தை மீட்க வேண்டி கோரிக்கை மனு.

ஐயா,

வேளச்சேரி 177வது வார்டில் பல இடங்களில் ஆக்கிரமிப்பில் இருக்கின்ற பொது பயன்பாட்டுக்கான அரசு நிலத்தை சிலர் தனியாருக்கு விற்று இருக்கிறார்கள். தற்போது அந்த நிலங்களில் வீடுகள், கடைகள் கட்டி வருமானம் ஈட்டி வருகிறார்கள். 177வது வார்டில் பொதுமக்களின் முக்கிய பயன்பாட்டிற்கு இடம் கிடைக்காமல் உள்ளது. குறிப்பாக ரேஷன் கடை, துணை மின்நிலையம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், போன்ற முக்கிய இடங்களுக்கு இடம் இல்லாமல் மேற்கண்ட பணிகளை நிறைவேற்ற முடியாமல் கிடப்பில் உள்ளது. மேற்கண்ட அரசுக்கு சொந்தமான இடங்களை கண்டறிந்து ஆக்கிரப்புகளை அகற்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம். அப்படி கொண்டு வரும் பட்சத்தில் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள நிலங்கள் கிடைக்கும். ஆகவே பொதுமக்கள் சார்பாகவும், நலச்சங்கம் சார்பாகவும், பொது பயன்பாட்டு அரசு நிலங்களை மீட்டு நடவடிக்கை எடுக்க வேண்டி கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

Copy 1 உயர்திரு. மாவட்ட ஆட்சியர் அவர்கள் சென்னை மாவட்டம்
Copy 2 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் (தனிப் பிரிவு)
Copy 3 உயர்திரு. ஆணையர் அவர்கள் கிரேடர் சென்னை மாநகராட்சி

GENERAL SECRETARY
Tansi Nagar Welfare Association
No.15/7, 14th Street, Tansi Nagar,
Velachery, Chennai - 42.



முதலமைச்சரின் உதவி மையம் உங்கள் கோரிக்கை மனு எண். TN/REV/CHN/P/CMCELL/23FEB23/5066407 - REV துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மனுவின் நிலை அறிய முதலமைச்சரின் உதவி மைய செயலியினை பதிவிறக்கம் செய்யவும் - https://zurl.to/cmhelpline - தமிழ்நாடு மின் ஆளுமை முகமை.

## சிவா விஷ்ணு ஆலயத்தில் நடைபெற உள்ள ஸ்ரீ வித்யா ஹயக்ரீவர் ஹோமம்...

நமது வேளச்சேரி சிவா விஷ்ணு ஆலயத்தில் 05/03/2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.30 மணி முதல் 12.00 மணி வரை ஸ்ரீ வித்யா ஹயக்ரீவர் ஹோமம் நடைபெற உள்ளது. பொதுதேர்வு எழதுவுள்ள மாணவ- மாணவியர் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெறவும், ஞானம், மனோதைரியம், ஞாபக சக்தி அதிகரிக்கவும், மேற்கல்வி, வேலை வாய்ப்பு வேண்டியும் ஹோமம் நடைபெறம்.

இதில் ஆசிரியர்கள், பெற்றேரர் தங்கள் பிள்ளைகளுடன் பங்கேற்று ஹயக்ரீவர் அருள்பெற வேண்டுகிறேம்.



# CLASSIFIED

**Commercial Space for Rent**
600 Square feet for 15,000/-@ ground floor
*31/14, Sarathy Nagar, 2nd street, Velachery ( Bethel Hr Sec School Opp )*
3 month rent as advance
CONTACT
8015427018

**WANTED**
Front Desk Executive
*(Male / Female)*
Ateliers Fitness Velachery, Behind A2b
*Contact*
**9841030772**

**TMS YOGA AND ART'S CENTER**
SIMPLE SOLUTION TO LEARN
ONLINE & OFFLINE
*Contact*
9789098094
8012041624
9500090445
Velachery, Madippakkam, Keelkatalai.

**DESIGNING**
Tamil & English DTP designing works
Rs. 750/- only
*Contact*
**7305837388**

**Commercial Space for Rent**
850 Square feet for 27,000/- @ ground floor
*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*
2 L as advance
CONTACT
7305837388

To Advertise about Your Business Rental House, Buying, Selling, Services & Job Vacancy Pay Rs. 100/- Only

**Mother Land**
*Play School, Day Care & After School Care*
*No.38, 2nd Street, Tansi Nagar, Vijayanagar, (Near ICICI Bank - Royal Shoppee) Velachery, Chennai - 600 042.*
*Contact*
**72992 62185**
**90947 52300**

**WANTED**
*Tele Callers*
CONTACT
**7305837388**

Prevention Tips For COVID-19




**WOMAN'S WELLNESS YOGA CENTRE**
**Contact : 9444 122 922**

**TREATMENTS FOR**
- Headache / Migraine
  தலைவலி / ஒற்றை தலைவலி
- Sinusitis
  சைனஸ் தொந்தரவு
- Neck Pain / Cervical Spondylosis
  கழுத்து வலி
- Back Pain / Lumber Spondylosis
  முதுகு வலி
- Digestion Problems & GIT disorders
  வயிறு ரூ குடல் சம்பந்தமான தொந்தரவுகள்
- Uterine ailment like Fibroid
  கர்ப்பப்பை கோளாறுகள்
- PCOD
  மாதவிடாய் கோளாறுகள்
- Respiratory ailments, Asthama
  சுவாச கோளாறுகள்
- Diabetes & is Complications
  சர்க்கரை வியாதிகள்
- Cholastrol, BP
  கொலஸ்ட்ரால்இ ரத்த கொதிப்பு
- Thyroid Problems
  தைராய்டு பிரச்சனை
- Stress, Anxiety & Sleep Disturbance
  மன அழுத்தம் ரூ தூக்கமின்மை
- Weight Loss & Weight gain
  உடல் எடையை குறைக்க ரூ அதிகரிக்க
- General Health
  பொது மருத்துவம்
- Infertility
  குழந்தையின்மை

**CONSULTANT CATERING HOSPITALITY SERVICE**
**NFC**
NIMS FOOD CONSULTANT
E. KAMESH KUMAR IHM-MBA
Office:plot No:4,kumaran nagar, keelkattalai, chennai-600117
Adviser:K.VIJAYA KANCHANA
MSC Food & Nutrition.
email:Nutritionnfc@gm
Mobile:9790 902400
email:Consultantnfc@gmail.com

**சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்**
Friday Price



| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | விலை 1 லிட்டர் |
| 102.63 | 94.24 |

NISHA YOGA & MEDITATION CENTRE VELACHERY
**Online Class for Women and Kids**
*FOR ALL AGE CATEGORIES*
*CONTACT*
**89391 53560**

**DESIGNING**
Tamil & English DTP designing works
Rs. 500/- only
*Contact*
**7358182075**

**WANTED**
LADIES TAILOR
**PRASUDRA Boutique**
No:2 LAKSHMI NAGAR, 2nd STREET, VELACHERY
*CONTACT - PREMALATHA*
**4435504719**
**8870393999**

**சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| தங்கம் விலை - | 22 கேரட் | | 24 கேரட் | |
| | 1 கிராம் | 5240 | 1 கிராம் | 5602 |
| | 8 கிராம் | 41920 | 8 கிராம் | 44816 |
| வெள்ளி விலை - | 1 கிராம் | 70.00 | | |
| | 1 கிலோ | 70000 | | |

Friday Price

**TUITION CENTRE @ Velachery**
**Baby Nagar**
*For Students Till 9th Grade of Any Syllabus*
*Contact*
**909 494 7285**

**Butter Flies**
Beauty Parlour & Beauty Training Institute
Recognised by Tamilnadu Governmen
Ladies & Kids Only
Consultant: Beauty tip & women empowerment (adviser)
No:1, MG NAGAR, ATHANUR - 603 202
binduinno@gmail.com
**80560 87391**
**81247 02731**

SHARAN TRAVELS
All kinds of Tourist vehicle available here
Drivers Available
Contact V. Marimuthu
**9840508030**

**RENTAL**
LAND BUYING, SELLING
All Kind of Building Repair Works Undertaken
Contact B. Rajendran
**90809 94500**

**SERVICES**
Plumbing works
Contact
Govindaswamy
87544 09752

ஆன்மீக தகவல்

# சர்வதோஷ பரிகார ரத்னம்

வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் அனைத்துத் துன்பங்களுக்கும், நாம் முற்பிறவியில் அறிந்தோ, அறியாமலோ செய்துள்ள தவறுகளே (பாவங்களே) காரணமாகும். அந்தத் தவறுகளின் அடிப்படையில்தான நவக்கிரகங்களும் நமக்கு சோதனைகளை விளைவிக்கின்றன. சுருக்கமாகக் கூறவேண்டுமானால், நமது சுக துக்கங்களுக்கு நமது செயல்களே உண்மையான காரணங்களாகும்.

கடன்கள், மன-அமைதி பாதிப்பு,கணவர், மனைவியரிடையே ஒற்றுமைக் குறைவு, நோய்கள், உடல் உபாதைகள், குழந்தைகளால் கவலை, சகவாச தோஷம் போன்ற இன்னும் பலவிதத் துன்பங்கள் மனதில் ஏற்படும் பாவகரமான சபலங்கள் ஆகியவை நமக்கு எத்தகைய காரணத்தினால் ஏற்படுகின்றன?

அவற்றிற்குத் தகுந்த பரிகாரங்கள் உள்ளனவா? இருப்பின், அந்தப் பரிகாரங்கள் என்னவென்பதை கண்டறிய உதவும் கணித முறைதான் ஜோதிடம் என்பதுதவறு செய்வது மனித இயல்பு இதற்குக் காரணம், கலியுகத்தில் மனித மனத்தின் உறுதி குறைவதேயாகும். அதனால்தான் தர்மம் குறைந்து, அதர்மம் பலமடைகிறது எத்தகைய தவறை நாம் செய்திருந்தாலும், அத்தகைய தோஷங்களினால், நமக்குத் துன்பங்கள் ஏற்படாமலிருக்க, எளிய, சக்திவாய்ந்த பரிகாரங்களை வேதகால மகரிஷிகள் அருளியுள்ளனர்.

அத்தகைய பரிகாரங்களில் முதன்மைப் பெற்று விளங்குவது, திருக்கோயில்களிலும், மகான்களின் பிருந்தாவனங்களிலும், தினமும் அல்லது குறிப்பிட்ட கிழமைகளிலும் நெய்தீபம் ஏற்றிவருவதேயாகும். இதற்கு வசதியற்றவர்கள், நல்லெண்ணெய் தீபம் ஏற்றலாம். நேய் தீபம் ஏற்றும் பரிகார முறையில் பல ரகசியங்களும், சூட்சுமங்களும் உள்ளன. உடனுக்குடன் தவறாது பலனளிக்கும் இந்தப் பரிகாரத்தின் மகத்தான சக்தியை அனுபவத்தில் காணலாம்.

கிழமை, தோஷப் பரிகாரம்:-

1. ஞாயிறு: இதயம், வயிறு ரத்தம், நரம்பு சம்பந்தமான நோய்கள், நாத்திக எண்ணங்கள், தெய்வ நிந்தனை, பெரியோர்களை அவமதித்தல், பெற்றோர்களை எதிர்த்துப் பேசுதல், பித்ரு பூஜைகளை விட்டு விடுவதால் ஏற்படும் துன்பங்கள்.

2. திங்கள்: மனக்கவலை, மனோ வியாதி, நிம்மதியின்மை, தாழ்வு மனப்பான்மை, குழந்தைகளுக்கு ஏற்படும் ஆட்டிசம் குறை, சொரியாசிஸ், எக்ஸிமா, வெண்புள்ளிகள் போன்ற சரும நோய்கள்.

3. செவ்வாய்: பெண்களுக்குத் திருமணம் தடைப்படுதல், ஜாதகத்தில் செவ்வாய் தோஷம், முன்கோபம், அவசர புத்தி, பிடிவாதம், வார்த்தைகளால் பிறர் மனத்தைப் புண்படுத்துவது, ஜாதகத்தில் கேதுவினால் ஏற்படும் தோஷங்கள்.

4. புதன்: படிப்பில் தடை, ஞாபகமறதி, பாடங்களில் ஆர்வமின்மை, மாணவர்களுக்கு சகவாச தோஷம், மருந்துகளுக்குப் பிடிபடாத நோய்கள்.

5. வியாழன்: ஆண்களுக்கு விவாகம் தடைபடுவது, குடும்பத்தில் மகிழ்ச்சியின்மை, புத்திர பாக்கியம் (ஆண் குழந்தை), தெய்வத்திடம் நம்பிக்கையின்மை, ஆச்சார்யர், குரு ஆகியோருக்கு துரொக மிழைத்தல், பெரியோர்களை அவமதிப்பது, குழந்தைகளால் பிரச்னை.

6. வெள்ளி: தாம்பத்திய சுகக் குறைவு, கணவர், மனைவி அந்நியோன்னியம் பாதிக்கப்படுதல், கடன் தொல்லைகள், மாங்கல்ய பலத்திற்கு சோதனை, பெண்களுக்கு - குடும்பத்தில் ஏற்படும் மனவேதனைகள், ஏற்படும் பணவிரயம்.

7. சனி: ஆயுள் ஆரோக்கியம், விபரீத நோய்கள், தொழில் பிரச்னை, ராகுவினால் ஏற்படும் பில்லி, சூனியம், செய்வினை தோஷங்கள், வேலையில் நிரந்தரமின்மை, ஜாதகத்தில் ராகுவினால் ஏற்படும் தோஷங்கள்.

விசேஷக் குறிப்பு:-

1. ராகுவினால் ஏற்படும் தோஷங்களுக்கு, சனிக்கிழமையும் கேதுவினால் ஏற்படும் தோஷங்களுக்கு, செவ்வாய்க்கிழமையும் தீபமேற்றுவது விசேஷ நன்மைகளைத் தரும்.

2. நெய் என்று சொல்லி லாபம் சம்பாதிப்பதற்காக கொழுப்பு போன்ற பொருட்களைக் கலப்படம் செய்து விற்பவர்கள் இப்பிறவியிலோ அல்லது மறுபிறவிகளிலோ நினைத்துப் பார்க்கவும் முடியாத பயங்கரமான சர்ம நோய்கள், குஷ்ட நோய்கள் ஆகியவற்றிற்கு ஆளாவார்கள் (ஆதாரம்: தர்ம சாஸ்திரம், ஆயுர்வேதம்) சாதாரணமான பரிகாரமாக இருக்கிறதே என்று எண்ணி அலட்சியமாக இருந்துவிடாதீர்கள் சர்வதோஷ பரிகாரமான இதன் சக்தி மகத்தானது.

---

விவசாயம் காப்போம்

# பீஜாமிர்தம் தயாரிக்கும் முறை மற்றும் பயன்படுத்தும் முறை

பீஜாமிர்தம் என்றால் என்ன:-

விதைக்கும் முன் விதைக்கு ஊட்டமளிக்க இயற்கைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் கலவையே பீஜாமிர்தம் எனப்படும்.

தயாரிக்க தேவையான பொருட்கள்:-

தண்ணீர் 20 லிட்டர்
பசு மாட்டு சாணம் 5 கிலோ
பசு மாட்டு கோமியம் 5 லிட்டர்
சுத்தமான சுண்ணாம்பு 50 கிராம்
ஜீவனுள்ள மண் ஒரு கைப்பிடி அளவு

பீஜாமிர்தம் தயாரிக்கும் முறை:-

முதல் நாள் மாலை 6 மணிக்கு மேற்ச் சொன்ன அனைத்தை பொருள்களையும் ஒன்றாக ஒரு கலனில் கலந்து வைத்துவிட வேண்டும். பின்னர் இந்த கலவையை மறுநாள் காலை 6 மணி வரை நன்றாக ஊற விடவேண்டும்.

இக்கலவையே பீஜாமிர்தம்மாகும். முதல் நாள் மாலையில் கலந்து வைத்தால் அடுத்த நாள் காலையில் இதை விதைகளின் மேல் தெளிக்கலாம்.

பீஜாமிர்தம் எப்படி பயன்படுத்துவது:-

விதை நேர்த்தி செய்ய வேண்டிய விதைகளை இந்த கரைசலில் 2 மணி நேரம் ஊற விட வேண்டும். நாற்றுகளாக இருந்தால் அதன் வேர்களை இந்த கரைசலில் நன்றாக நனையவிட்டு பிறகு நடவு செய்ய வேண்டும்.

விதை நெல்லை எவ்வாறு நேர்த்திசெய்வது:-

10 லீட்டர் தண்ணிரில் 1 கிலோ கல்லுப்பை கரைத்து, அதில் 10 கிலோ விதை நெல்லை இடவேண்டும். தண்ணிரில் மிதக்கும் விதைகளை நீக்கிவிட்டு, மூழ்கிய நெல்லை மட்டும் எடுத்து நீரில் அலசி, அதிலிருந்து 9 கிலோ நெல்லை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து சணல் சாக்கில் நெல்லை கொட்டி மூட்டையாகக் கட்டி 12 மணிநேரம் தண்ணீரில் ஊறவைக்க வேண்டும்.

பின்னர் பிஜாமிர்தத்தில் 2 மணிநேரம் உறவைத்து எடுத்து அதன்பின் 24 மணிநேரம் இருட்டில் வைத்து பின்னர் விதைக்க வேண்டும்.

இந்த விதைகளை நாற்றங்காலில் தூவி, விதைகள் வளர்ந்து 25 முதல் 30 நாட்களில் நாற்றானதும் அவற்றை எடுத்து வயலில் நடுகிறோம்.

நெல் நாற்றுகளை வயலில் நட்ட பிறகு, முதல் நீர் பாய்ச்சும்போது ஜீவாமிர்தம் என்னும் மற்றொரு கலவையை சேர்த்துப் பாய்ச்ச வேண்டும்.

பீஜாமிர்த்தின் நன்மைகள்:-

வேர் அழுகல், வேர்க்கரையான், வேர்ப்புழு நோய்கள் தாக்குதள் தடுக்கப்படும்.


எல்லா வகை பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை.



# ராட்சச பீட்ரூட்

நீதி கதை

ஒரு ஊருல ஒரு விவசாயி இருந்தாரு ,அவரு தன்னோட தோட்டத்துல பீட்ரூட் விளைச்சல் செஞ்சாரு





ஒரு நாள் அவர் பயிர் செஞ்ச எல்லா பீட்ரூட்டும் நல்லா விளைஞ்சிருக்குறத பாத்துகிட்டே போனப்ப

ஒரு பீட்ரூட் மட்டும் ரொம்ப பெருசா வளந்திருக்குறத பாத்தாரு

அடடா இந்த பீட்ரூட்ட மட்டும் நாம சந்தைக்கு கொண்டு போயி வித்தா நிறைய பணம் கிடைக்கும்னு சொல்லிட்டு அத பிடுங்க பாத்தாரு

ஆனா அந்த பீட்ரூட் பிடுங்க வரல ,ஒடனே ஒரு பெரிய கயிற கட்டி அந்த பீட்ரூட்ட பிடுங்க பாத்தாரு




அப்பாவும் அது பிடுங்க வரல ,உடனே அவரோட மனைவிய கூப்பிட்டு ரெண்டு பேரும் சேர்ந்து பீட்ரூட்ட பிடுங்க பாத்தாங்க ,அப்பவும் அத பீட்ரூட் பிடுங்க வரல



உடனே அவரோட மகனையும் சேர்த்துக்கிட்டு பீட்ரூட்ட பிடுங்க பாத்தாங்க ,அப்பவும் அத பீட்ரூட் பிடுங்க வரல

உடனே அவரோட மகளையும் கூப்பிட்டு சேர்த்துக்கிட்டு பீட்ரூட்ட பிடுங்க பாத்தாங்க ,அப்பவும் அத பீட்ரூட் பிடுங்க வரல



இவங்க கஷ்டப்படுறத பார்த்த அவுங்க தோட்டத்து நாய் அதுவும் வந்து உதவி செஞ்சது அப்பவும் அந்த பீட்ரூட் பிடுங்க வரல

அங்க இருந்த பூனையும் சேர்ந்துக்கிட்டு அவுங்களுக்கு உதவி செஞ்சது அப்பத்தான் அந்த பீட்ரூட் வெளியில வந்துச்சு

உடனே அந்த பூனை மேல பிரியமா இருந்த அந்த வீட்டு பொண்ணு சொன்னா பாத்திங்களா உங்க யாராலயும் முடியாததை என் செல்ல குட்டி வந்ததும் செஞ்சிட்டிங்கனு சொன்னா




அதுக்கு தங்களுக்கு உதவின நாய்க்குட்டி மேல பிரியமா இருந்த அந்த வீட்டு பையன் சொன்னான் இல்லை இல்லை பலசாலியான இந்த நாய்க்குட்டி உதவுனதால தான் நம்மளால இந்த பீட்ரூட்ட பிடுங்க முடிஞ்சதுனு சொன்னான்




குழந்தைகளா நீங்க இதேமாதிரி ஒற்றுமையா எல்லா விஷயங்களையும் செஞ்சீங்கனா ஒங்களுக்கு ரொம்ப நல்லதுன்னு சொன்னாரு

## நீதி :- ஒற்றுமையே பலமாம்

# M. A. PATHAN

**09-Mar-1942**



*M.A.Pathan was the Chairman of Indian Oil Corporation Ltd. from February 1997 to March 2002.*

*Pathan has a daughter and a son Malhar and Mohit and had been on the Indian Oil Board since 1994 as the Director-in-Charge of Marketing.*

*He was the Chairman of Petroleum Federation of India (PetroFed) from 1 April 2002 to 3 August 2003.*




## ALTERNATIVES

- **Neat - Immaculate**
- **Very Tired - Jaded**
- **Very Tasty - Appetizing**
- **Very Sleepy - Lethargic**



Dr.Mrs. Y. Deepika,
M.Sc.,Ph.D.,
Delhi Public School,
Nacharam,Telangana,

# LUNARIS 2K23 - CULTURAL EXTRAVAGANZA ON " GENDER EGALITARIANISM"...



Mega Cultural Festival on the theme " Gender Egalitarianism " was successfully conducted in Guru Nanak College ( Autonomous) accredited at A++ , Velachery , Chennai 42 , today 28.02.2023, With overwhelming participation of 1200 contestants including 800 woman students, adding a special focus , an extra credit to the theme " valour of woman", with a grandeur strength from 35 departments.

The cultural extravaganza was happening for three days from 28.02.2023 to 01.03.2022 with twenty events focusing on Gender equality and women rights.

The theme event Ms.Lunaris , singppen the woman of valour was the highlight of the program.

The young women of our GNC exhibited their silambam skills using various fighting tools like the stick, the sword and the spring weapon. They manouvred the fighting tools dexterously. On par with men they exhibited their bravery through somersaulting. It was a real feast for the eyes of the audience watching the brave young women of our college displaying their Martial arts. The audience were awestruck watching our women students performing with bravery. This is the need of the hour for very women students to empower herself with self defence technique.

Hundreds of woman students performed martial arts and folk arts and demonstrated the bravery and valour of woman.

The Fine arts club and students council organized the grand event successfully, Their message through this mega cultural event was

" Art is not only for entertainment and celebration, art is a powerful tool to bring about a change in society. Our languages, religions, cultures, history, are all male centric. It is time to reconstruct everything from a gender neturalistic view. History is full of heroes and its time to celebrate the sheroes. **The objective of LUNARIS was to create awareness and sensitize the young generation towards gender equality and women rights through various art forms**. Sex is a biological definition. It comes












from nature . But gender is only a social and cultural construction. In an ideal egalitarian society the difference of gender will disappear and will have no meaning.

Singappen veerathamizhachi, Fashion walk- Ms & Mr Lunaris, Short film , theatre on women , Ship wreck, debate , Folk arts , Dance, Musical band were the major events focusing on the theme of gender equality.

The program was was full of vibrance, energy , celebration and artistic discourses, clash of ideas , clash of minds and clash of counterpoints , yet at the end of the day it was unification of hearts.

Majit Singh Nayar, Secretary & Correspondent , Dr.M.G.Ragunathan , Principal , and Dr Marlene Morais , advisor of the Institution felicitated the program and delivered their wishes for the student council and fine arts association.

Winners were honored with a prizes and certificates. Winners and runners from both shifts were honoured and four overall trophies were given to the champions.







# இந்த வார ராசிபலன்



**மேஷம்**

இந்த வாரம், நீங்கள் எதிர்பார்த்ததை விட, உங்கள் மூத்த சகோதரர் மற்றும் சகோதரியின் ஆதரவைப் பெறுவீர்கள்.



**துலாம்**

இந்த வாரம் நிதி சிக்கல்களிலிருந்தும் விடுபட முடியும், நிதி வாழ்க்கையில் ஏற்ற தாழ்வுகளை உங்கள் புரிதலுடனும் சமாளிக்க முடியும்



**ரிஷபம்**

இந்த வாரம், நீங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் நம்பிக்கையுடன் வைத்திருக்க முடியும், நீங்கள் நிலைமையை உறுதியாக எதிர்கொள்ள முடியும்.



**விருச்சிகம்**

இந்த வாரம், மாணவர்கள் கடினமாக உழைக்க வேண்டும், இந்த நேரத்தில் அவர்களின் புரிந்துகொள்ளும் திறன் சிறப்பாக இருக்கும்.



**மிதுனம்**

இந்த வாரம் உங்கள் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி, அமைதி மற்றும் செழிப்பு ஆகியவற்றைக் கொண்டு வரும்.



**தனுசு**

இந்த வாரம் உங்கள் தொழில் வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும்.



**கடகம்**

இந்த வாரம் வேலையைப் பொறுத்தவரை, உங்களுக்கு உற்சாகம் மற்றும் ஆற்றலின் பற்றாக்குறை இருக்கும்.



**மகரம்**

இந்த வாரம் முன்பை விட சிறப்பாக இருக்கும். உங்கள் வீட்டில் உள்ள பெரியவர்கள் குறிப்பாக உங்கள் பெற்றோரின் ஆதரவைப் பெறுவீர்கள்.



**சிம்மம்**

இந்த வாரம் உங்கள் முயற்சிகள் வெற்றி பெறும், நண்பர்களால் கௌரவிக்கப்படுவீர்கள். குடும்பத்தில் மரியாதை பெறுவீர்கள்.



**கும்பம்**

இந்த வாரம் உங்கள் வசதிக்கான விஷயங்களுக்கு பணத்தை செலவிடலாம், அதை நீங்கள் எதிர்காலத்தில் மட்டுமே யூகிக்க முடியும்.



**கன்னி**

கடந்த காலத்தில் செய்த அனைத்து வகையான சொத்துக்கள் தொடர்பான பரிவர்த்தனைகள் இந்த வாரம் முடியும். இதன் காரணமாக நீங்கள் பலனடைவீர்கள்.



**மீனம்**

உங்கள் எதிரிகள் இந்த வாரம் முழுவதும் சுறுசுறுப்பாக இருப்பார்கள், உங்கள் பலவீனங்களைப் பயன்படுத்தி, அவர்கள் சதி செய்வதைக் காணலாம்.

# YOGASANAM

## பத்ம ஹலாசனம்

**பலன்கள்:-**



முதுகுத்தண்டின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கிறது
முதுகுத்தண்டை நீட்சியடைய வைக்கிறது
முதுகுத் தசைகளைப் பலப்படுத்துகிறது
இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகிறது
நரம்பு மண்டலத்தைப் பலப்படுத்துகிறது
தொப்பையைக் கரைக்கிறது
இடுப்பு மற்றும் தொடையிலுள்ள அதிக சதையைக் கரைக்கிறது
வயிற்று உள்ளுறுப்புகளின் செயல்பாடுகளை மேம்படுத்துகிறது
குழந்தையின்மை பிரச்சினையைப் போக்க உதவுகிறது
கால் தசைகளைப் பலப்படுத்துகிறது
மூட்டுகளின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிப்பதோடு பலப்படுத்தவும் செய்கிறது
கழிவுகளை வெளியேற்றுகிறது
அசதியைப் போக்குகிறது
மன அழுத்தத்தைப் போக்குகிறது
மன அமைதியை வளர்க்கிறது.

**செய்முறை:-**

விரிப்பில் கால்களை நீட்டிப் படுக்கவும். கைகளை உடலின் பக்கவாட்டில் வைக்கவும்.

சர்வாங்காசன நிலைக்கு வரவும். அதாவது, மூச்சை வெளியேற்றியவாறு கால்களை மேல் நோக்கி உயர்த்தவும்.

புட்டத்தை உள்ளங்கைகளால் தாங்கியவாறு கழுத்திலிருந்து கால்வரை ஒரே நேர்க்கோட்டில் இடுப்புக்கு நேராக நிறுத்தவும். இது சர்வாங்காசன நிலை. மூச்சை உள்ளிழுக்கவும்.

கால்களை ஒன்றன் பின் ஒன்றாக பத்மாசன நிலையில் இருப்பது போல் மடக்கவும்.

மூச்சை வெளியேற்றியவாறு கால்களை முகத்தை நோக்கிக் கொண்டு வரவும். கால் முட்டிகளை முகத்தில் வைக்கவும்.

30 வினாடிகள் இந்நிலையில் இருக்கவும். பின் கால்களை நிமிர்த்தி, பத்மாசன நிலையிலிருந்து வெளி வந்து தரையில் ஆரம்ப நிலையில் இருந்தது போல் படுக்கவும்.

# முகப்பருவைப் போக்க இயற்கை மருத்துவக் குறிப்புகள்...

1) துளசி:-

துளசி, antibacterial மற்றும் antifungal தன்மைகள் கொண்டது. இது ஒரு antiseptic ஆகவும் செயல்படுகிறது.

ஒரு கைப்பிடி துளசி இலைகளை நன்றாகக் கழுவி அரைத்துக் கொள்ளவும். சிறிது சந்தனத்தைச் சேர்த்து நன்றாகக் கலந்து முகத்தில் பூசி காய விடவும். சுமார் 15 அல்லது 20 நிமிடங்களுக்குப் பிறகு நீரால் முகத்தைக் கழுவவும். தொடர்ந்து செய்து வர முகப்பருக்கள் மறையும்.

தினமும் ஒன்று அல்லது இரண்டு முறை துளசித் தேநீர் பருகலாம்.

2) இஞ்சி:-

இஞ்சி collagen உற்பத்தியைத் தூண்டுவதன் மூலம் சரும நலத்தைப் பாதுகாக்கிறது. மேலும் இஞ்சி சருமத்தின் கழிவுகளை வெளியேற்றுவதன் மூலம் பருக்களைப் போக்கவும் தவிர்க்கவும் உதவுகிறது.

இஞ்சிச் சாறுடன் சிறிது தேன் சேர்த்து பருக்கள் மீது பூசவும். சுமார் 20 நிமிடங்களுக்குப் பின் முகத்தைக் கழுவவும்.

இஞ்சிச் சாறுடன் சிறிது தேன் சேர்த்து கருந் திட்டுக்கள் மீது பூசவும். சுமார் 20 நிமிடங்கள் கழித்து முகத்தைக் கழுவவும்.

இஞ்சித் தேநீர் பருகவும்.

3) எலுமிச்சை சாறு:-

எலுமிச்சையிலிருக்கும் antiseptic, antifungal மற்றும் antibacterial தன்மைகள் கொண்டது. இது பருக்களை உருவாக்கும் bacteria-க்களை அழிக்கிறது. மேலும் இது அதிக எண்ணெய் சுரப்பைக் கட்டுப்படுத்துகிறது.

எலுமிச்சை சாற்றில் சிறிது பஞ்சை நனைத்து, பருக்களின் மீது பூசவும்.

எலுமிச்சை சாற்றில் சிறிது தேனை சேர்த்து நன்றாகக் கலந்து பருக்கள் மீதி பூசவும். காய்ந்த பின் கழுவவும்.

4) வேப்பிலை:-

வேப்பிலை anti-fungal, antiviral, antiseptic, antibacterial மற்றும் anti-inflammatory தன்மைகள் கொண்டது. வேப்பிலையில் vitamin C இருப்பதால் அது collagen உற்பத்தியைத் தூண்டி சருமத்தைப் பொலிவோடும் இளமையோடும் வைத்திருக்க உதவுகிறது.

கைப்பிடி அளவு வேப்பிலையை நன்றாகக் கழுவி அரை லிட்டர் தண்ணீரில் சேர்த்து கொதிக்க வைக்கவும். தண்ணீரை மூடி ஆற வைக்கவும். நீரின் நிறம் மாறியிருப்பதை நீங்கள் பார்க்கலாம். ஆறிய வேப்பிலை நீரை ஒரு புட்டியில் பாதுகாப்பாக வைத்து, தேவைப்படும் அளவு எடுத்து பருக்களின் மீது பஞ்சால் ஒற்றவும்.

வேப்பிலையை சுத்தம் செய்து இரவில் தண்ணீரில் போட்டு மூடி வைக்கவும். காலையிலும் மாலையிலும் வேப்பிலை நீரால் முகத்தைக் கழுவவும்.

ஒரு மேசைக்கரண்டி வேப்பிலை சாறு எடுத்து அதனுடன் சிறிது தண்ணீர் சேர்த்து தினமும் பருகி வரவும்.

5) பூண்டு:-

பூண்டில் இருக்கும் allicin, பருக்களை உருவாக்கும் bacteria-வை அழிக்கிறது. பூண்டு antibacterial, antiviral, antimicrobial மற்றும் antifungal தன்மை கொண்டது.

வெள்ளைப் பூண்டை அரைத்துப் பருக்களின் மீது பற்றுப் போடவும். உலர்ந்த பின் முகத்தைக் கழுவவும்.

6) சோற்றுக் கற்றாழை:-

சோற்றுக் கற்றாழையில் இருக்கும் antibacterial தன்மைகள் பருக்களை அழிக்கவும் தவிர்க்கவும் உதவும். மேலும் சோற்றுக் கற்றாழை collagen உற்பத்தியைத் தூண்டுவதால், பருக்களின் தடம் விரைவில் மறைந்து சரும நலன் பாதுகாக்கப்படுகிறது.

சோற்றுக் கற்றாழையைத் தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் பருக்கள் தோன்றுவதைத் தவிர்க்கலாம். பருக்கள் காரணமாக வரும் எரிச்சல், வீக்கம் ஆகியவற்றை இது போக்குகிறது.

7) ஆப்பிள் சிடர் வினிகர்:-

ஆப்பிள் சிடர் வினிகர் antibacterial மற்றும் antiseptic தன்மைகள் கொண்டது.

ஆப்பிள் சிடர் வினிகரை சிறிது எடுத்து அதோடு தண்ணீரை சம அளவு சேர்த்துக் கலக்கவும். சுத்தமான பஞ்சை இதில் நனைத்து பருக்கள் மீது தடவி காய விடவும்.

# Entertainment Corner

## Arusuvai Samayal
## முட்டை மஞ்சூரியன் கிரேவி

### தேவையான பொருட்கள்:-

5 முட்டை
1 பெரிய வெங்காயம்
2 குடை மிளகாய்
1/4 கப் மைதா மாவு
1/4 கப் சோள மாவு
எண்ணெய் தேவையான அளவு
உப்பு தேவையான அளவு
1 துண்டு இஞ்சி
1 மேஜைக்கரண்டி சிறிதாக நறுக்கிய பூண்டு
மிளகு தூள் தேவையான அளவு
மிளகாய்த்தூள் தேவையான அளவு
2 மேஜைக்கரண்டி சில்லி சாஸ்
2 மேஜைக்கரண்டி கெட்சப்
1 மேஜைக்கரண்டி சோயா சாஸ்
வேங்காயத் தாள் தேவையான அளவு

### செய்முறை:-

முதலில் ஒரு bowl ல் முட்டைகளை உடைத்து ஊத்தி அதில் உப்பு மற்றும் மிளகு சேர்த்து நன்கு அடித்துக் கொள்ளவும்.

பின்பு ஒரு கிண்ணத்தில் நன்றாக எண்ணை தடவி அடித்து வைத்துள்ள முட்டையை அதில் ஊற்றவும்.

அடுத்து ஒரு குக்கரை மிதமான சூட்டில் அடுப்பில் வைத்து இந்த கிண்ணத்தை அதனுள் வைத்து மூடி போட்டு 15 லிருந்து 20 நிமிடம் வரை வேக விடவும்.

20 நிமிடத்திற்கு பிறகு எடுத்து பார்த்தால் முட்டை நன்றாக வெந்திருக்கும். இப்பொழுது இந்த வெந்த முட்டையை வேறொரு பாத்திரத்திலோ அல்லது தட்டிலோ மாத்தி துண்டுகளாக்கிக் வைத்து கொள்ளவும்.

இப்பொழுது ஒரு bowl ல் சோள மாவு, மைதா மாவு மற்றும் அவர் அவர் விருப்பத்திற்கேற்ப மிளகாய்த்தூள் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும்.

பின்னர் அதில் சிறிது அளவு தண்ணீர் சேர்த்து பஜ்ஜி மாவு பதத்திற்கு கலக்கி கொள்ளவும்.

அடுத்து வேக வைத்து வெட்டி வைத்திருக்கும் முட்டை துண்டுகளை இதில் போட்டு நன்கு பிரட்டி அதை அப்படியே 5 நிமிடம் ஊற வைக்கவும்.

அதற்குள் ஒரு வடசட்டி மிதமான சூட்டில் அடுப்பில் வைத்து அதில் எண்ணெய் ஊற்றி சூடாக்கவும்.

எண்ணெய் சூடானதும் வடசட்டி இன் அளவிற்கேற்ப 2 அல்லது 3 முறையாக முட்டை துண்டுகளை போட்டு பொரித்து எடுத்து வைத்துக் கொள்ளவும். (முட்டை துண்டுகளை நன்றாக வருத்து விடக்கூடாது. முட்டை துண்டுகள் மொறு மொறுப்பானதும் அதை எண்ணெயில் இருந்து எடுத்து விட வேண்டும்.)

இப்பொழுது ஒரு பாத்திரத்தை மிதமான சூட்டில் அடுப்பில் வைத்து அதில் 2 மேஜைக்கரண்டி எண்ணெய் ஊற்றி சுட வைக்கவும்.

எண்ணெய் சூடானதும் அதில் சிறிதாக நறுக்கிய பூண்டு மற்றும் இஞ்சி சேர்த்து அதனின் பச்சை வாசனை போகும் வரை வதக்கவும்.

பின்பு அதில் நறுக்கிய வெங்காயத்தை சேர்த்து சிறிது நேரம் வதக்கிய பின் அதில் நறுக்கிய குடை மிளகாய் சேர்த்து 2 நிமிடம் வரை வதக்கவும்.

2 நிமிடத்திற்கு பிறகு அதில் சில்லி சாஸ், கெட்சப், சோயா சாஸ், தேவையான அளவு உப்பு மற்றும் மிளகு தூள் சேர்த்து நன்கு கிளறவும். (குரேவி மிகவும் ட்ரையாக இருந்தால் ஒரு மேஜைக்கரண்டி சோள மாவில் சிறிது தண்ணீர் சேர்த்து நன்கு கலக்கி கிரேவியுடன் சேர்த்து கொள்ளவும்.)

அடுத்து பொரித்து வைத்திருக்கும் முட்டை துண்டுகளை இந்த கிரேவியுடன் சேர்த்து நன்கு கிளறி சுமார் 2 நிமிடம் வரை வேக விடவும்.

இரண்டு நிமிடத்திற்கு பிறகு அதில் சிறிதளவு வெங்காயத் தாள்களை தூவி ஒரு கிளறு கிளறி அடுப்பிலிருந்து இறக்கவும்.

இப்பொழுது உங்கள் சூடான மற்றும் சுவையான முட்டை கிரேவி மஞ்சூரியன் தயார்.

## SUDOKU ANSWER

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 6 | 8 | 2 | 7 | 9 | 4 | 1 |
| 1 | 7 | 2 | 9 | 6 | 4 | 3 | 5 | 8 |
| 8 | 9 | 4 | 1 | 5 | 3 | 2 | 6 | 7 |
| 7 | 1 | 5 | 3 | 4 | 9 | 8 | 2 | 6 |
| 6 | 4 | 3 | 7 | 8 | 2 | 1 | 9 | 5 |
| 9 | 2 | 8 | 5 | 1 | 6 | 7 | 3 | 4 |
| 4 | 8 | 1 | 2 | 9 | 5 | 6 | 7 | 3 |
| 3 | 6 | 9 | 4 | 7 | 1 | 5 | 8 | 2 |
| 2 | 5 | 7 | 6 | 3 | 8 | 4 | 1 | 9 |

## SUDOKU GAME

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | | | | | 9 |
| | 1 | 9 | | | 5 | 8 | 3 | |
| | 4 | 3 | | 1 | | | | 7 |
| 4 | | | 1 | 5 | | | | 3 |
| | | 2 | 7 | | 4 | | 1 | |
| | 8 | | | 9 | | 6 | | |
| | 7 | | | | 6 | 3 | | |
| | 3 | | | 7 | | | 8 | |
| 9 | | 4 | 5 | | | | | 1 |

## விடுகதை விளையாட்டு

1. வினா இல்லாத ஒரு விடை
-அது என்ன விடை?

2.உரசினால் உயிரே மாய்த்துக் கொள்ளும்
-அது என்ன?

3. கை பட்டால் சிணுங்கும் கன்னிப் பெண் கூச்சல் போட்டு கதவை திறக்க வைப்பவள் -அவள் யார்?

4. தாழ்ப்பாள் இல்லாத கதவு தானாக மூடி திறக்கும் கதவு - அது என்ன?

5. பேசாத வரை நான் இருப்பேன் பேசினால் நான் உடைந்துவிடுவேன் -நான் யார்?

6. நான் சூரியனைக் கடந்து சென்றால் கூட எனக்கு நிழல் ஏற்படாது -நான் யார்?

7. முழு உலகமும் சுற்றி வரும் ஆனால் ஒரு மூலையிலேயே இருக்கும் -அது என்ன?

8. ஆகாரமாக எதையும் தந்தால் சாப்பிடுவேன் ஆனால் நீரை குடிக்க தந்தால் இறந்து விடுவேன்
-நான் யார்?

9. கண்டு பிடித்தவனும் வைத்திருக்கவில்லை வாங்கியவனும் உபயோகிக்கவில்லை உபயோகிப்பவனுக்கு அதனை பற்றி எதுவும் தெரியாது -அது என்ன?

10. ஒரு குற்றத்தை செய்ய முயற்சித்தால் தண்டனை உண்டு ஆனால் குற்றத்தை செய்தால் தண்டிக்க முடியாது அக் குற்றம் -என்ன?

Publisher : R. Rajesh
Editor : Saranya Rajesh
Designer : D. Deepa
Journalist : P. Praveen
Marketing Executive : C. Karthikeyan

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

Express Velachery
Weekly - News Paper
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm
Saturday 9.30 am to 12.30 pm
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.

## சொல் விளையாட்டு

ஐந்து எழுத்து சொற்கள்
கண்டுப்பிடியுங்கள்...

1. ந ட் ஓ ர் டு ............................
2. ப ம் ள ச ம் ............................
3. கா டை க் கோ ல ம் ....................
4. வ தி டி ண் மி ............................
5. சி ய ஆ ர் ரி ............................
6. வி ன் றி மி றி ............................
7. வ ப் து ர் பு ............................
8. கி ம் ங் ல ஆ ............................
9. த ய ந் ம் ப ............................
10. மு ம் றை க து ............................

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெயில் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

## சென்ற வார விடுகதை விளையாட்டு விடைகள்

1. உப்பு
2. சட்டை
3. எறும்புகள்
4. கொடி
5. துத்தநாகம்
6. முட்டை
7. மழை
8. பெட்ரோல்
9. இளநீர்
10. எறும்பு

# CHUTTIES CORNER

## தனித்திறமை பகுதி





***Joshua Daniel***
Class 5
St. Theresa Bacq
Public School,
Bangalore.






***Yeddanapudi Jeyan***
Class 5
Delhi Public School,
Nacharam,
Telangana.

## PAPER CRAFT




## படத்தில் உள்ள 10 வித்தியசங்களை கண்டுபிடியுங்கள்...!



## *MEHNDI*









Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, Mo.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH